இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 323 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆனி 19 – வியாழக்கிழமை 03 ஜூலை 2025 – கோவை ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 323 : Thiruvalluvar Year - 2056 - Aani 19 - Thursday 03 July 2025 - Kovai ★★ 16 Pages ₹ 5.00


## தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில்

# தி.மு.க. கூட்டணி 200 இடங்களுக்கு மேல் வெற்றி பெறும்!

## ‘ஓரணியில் தமிழ்நாடு’ திட்டத்தைத் தொடங்கி வைத்து – கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

**சென்னை, ஜூலை 3 -**

**“தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி 200 இடங்களுக்கு மேல் வெற்றி பெறும்” என்று கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அண்ணா அறிவாலயத்தில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ மாபெரும் கழக உறுப்பினர் சேர்க்கைத் திட்டத்தைத் தொடங்கி வைத்து உரையாற்றும் போது உறுதிபடக் கூறினார்.**

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், ‘ஓரணியில் தமிழ்நாடு’ முன்னெடுப்பைத் தொடங்கி வைத்து, செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழக அரசியல் வரலாற்றில் மட்டுமல்ல, தமிழ்நாட்டின் வரலாற்றிலும் மிக முக்கியமான நாளாக, இந்த நாள் அமையப் போகிறது.

‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற மகத்தான முன்னெடுப்பை திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் இன்றைக்கு, நான் தொடங்கி வைக்கிறேன். இன்று தொடங்கி, 45 நாட்கள் தொடர்ந்து இந்தப் பயணம் நடைபெறுகிறது. இன்று 38 வருவாய் மாவட்டக் கழகங்களிலும், அந்தந்த மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் சேர்ந்து,



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.7.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், ”ஓரணியில் தமிழ்நாடு மாபெரும் கழக உறுப்பினர் சேர்க்கைத் திட்டத்தை தொடங்கி வைத்து, செய்தியாளர்களை சந்தித்தார். உடன் கழகப் பொருளாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு, கழக இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் தலைமைக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

எனது இந்தச் செய்தியாளர் சந்திப்பு முடிந்தவுடன் இன்றைக்கு அவரவர் பகுதிகளில் ஊடகத் தோழர்களையும், பத்திரிகை நண்பர்களையும் சந்திக்க இருக்கிறார்கள்.

நாளை, தமிழ்நாட்டில் இருக்கும் 76 மாவட்டக் கழகங்களிலும் ஓரணியில் தமிழ்நாடு என்ற தலைப்பில் நடைபெறும் பொதுக்கூட்டங்களில் பங்கேற்று கழக முன்னணி பேச்சாளர்கள் உரையாற்ற இருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து, ஜூலை 3 முதல், தமிழ்நாடு முழுவதும் வீடு வீடாகச் சென்று மக்களைச் சந்திக்க இருக்கிறோம். அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் அவரவர் சொந்த வாக்குச்சாவடிகளில் இருக்கும் வீடுகளுக்கு நேரில் செல்ல இருக்கிறார்கள்.

இதற்காக, கழகத்தின் தகவல் தொழில்நுட்ப அணி சார்பில், தொகுதிக்கு ஒருவர் என்று 234 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. பயிற்சி பெற்ற அந்த 234 நபர்களும் தமிழ்நாடு முழுவதும் 68 ஆயிரம் வாக்குச்சாவடிகளில் இருக்கும் பூத் டிஜிட்டல் ஏஜெண்ட்களுக்கு (BDA) பயிற்சி தந்திருக்கிறார்கள்.

தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்க, மக்கள் அனைவரையும் ஓரணியில் திரட்டுவதுதான் இதன் அடிப்படையும், முதன்மையான நோக்கமும்!

தமிழ்நாட்டுக்கு தொடர்ந்து இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் ஒருங்கிணைய வேண்டும் - அதை எதிர்த்துப் போராட வேண்டும் என்பதற்கான முயற்சிதான் இது.

### ஒன்றிய பா.ஜ.க. அரசால் தமிழ் - தமிழ்நாடு பாதிப்பு!

ஒன்றிய பா.ஜ.க. அரசால் நம்முடைய தமிழும் தமிழ்நாடும் எப்படியெல்லாம் பாதிக்கப்படுகிறது என்று நான் உங்களுக்கு அதிகம் விளக்கத் தேவையில்லை.

**சுருக்கமாகத் தலைப்புச் செய்திகளை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன்.**

**அரசியல், பண்பாடு, மொழி, பொருளாதாரம் என்று அனைத்து வகையிலும் நமக்கு எதிராகச் செயல்படுகிறார்கள் என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகளைச் சொல்ல வேண்டும் என்றால்,**

**அனைத்திலும் வளர்ந்த தமிழ்நாட்டை, ஒன்றிய அரசு பல்வேறு வழிகளில் புறக்கணிக்கிறது.**

**தமிழ்நாட்டில் இருந்து வசூலிக்கப்படும் வரி, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குத் தரப்படுவது இல்லை.**

**தமிழ்நாட்டின் நிதி உரிமைகள் ஜி.எஸ்.டி. கொள்கை மூலமாக பறிக்கப்படுகிறது.**


தொடர்ச்சி 3ஆம் பக்கம்


---

## கல்வியை இறுகப் பற்றிக் கொள்ளுங்கள்!

# உழைப்பு, திறமை, உறுதி இருந்தால் வெற்றி நிச்சயம்!

## “வெற்றி நிச்சயம்” திட்டத்தைத் தொடங்கி வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, ஜூலை 3 -**

**கல்வியை இறுகப் பற்றிக் கொள்ளுங்கள் என்றும் உழைப்பு, திறமை, உறுதி இருந்தால் வெற்றி நிச்சயம் என்றும் நான் முதல்வன் - “வெற்றி நிச்சயம்” திட்டத்தைத் தொடங்கி வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.7.2025) சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற “நான் முதல்வன்” திட்டத்தின் மூன்றாண்டு வெற்றி விழாவில் கலந்து கொண்டு, “வெற்றி நிச்சயம்” திட்டத்தை தொடங்கி வைத்து, ஆற்றிய உரை வருமாறு:-

“நான் முதல்வன்” திட்டத்தின் மூன்றாண்டு வெற்றி விழா மற்றும் “வெற்றி நிச்சயம்” திட்டம் தொடக்க விழாவில் பங்கேற்றுள்ள உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

‘Success’! இதை நோக்கிதான் வாழ்க்கையில் எல்லோரும் உழைக்கிறோம்! அப்படி Successful மாணவர்களை உருவாக்கக்கூடிய ஒரு Successful திட்டத்திற்கான உண்மையான ‘Success Meet’ தான் இந்த வெற்றி விழா! அது மட்டுமல்ல, “வெற்றி நிச்சயம்” என்று மற்றொரு புதிய முயற்சிக்கான தொடக்க விழாவும் கூட!

### உங்களின் சக்சஸ்தான் நான் முதல்வனின் சக்சஸ்!

இங்கு கூடியிருக்கும் நீங்கள் தான் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பாவேந்தர் பாரதிதாசன், முத்தமிழறிஞர் கலைஞர் உள்ளிட்டோர் காண விரும்பிய அறிவுச் செழிப்புமிக்க தமிழ்நாடு! உங்களுக்கான வாய்ப்புகளை எளிதாக்க வேண்டும், உங்களுக்கான வெற்றிப்படிக்கட்டுகளை அமைக்க வேண்டும் என்றுதான் இந்த நான் முதல்வன் திட்டம் உருவாக்கப்பட்டது. அதை உருவாக்கியது நம்முடைய திராவிட மாடல் அரசும், இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினும்தான் என்று என்னால் நெஞ்சை நிமிர்த்தி பெருமையோடு சொல்ல முடியும்!

என்னதான் நாங்கள் திட்டத்தை தொடங்கினாலும், அதை சரியாக பயன்படுத்தி நீங்கள் முன்னுக்கு வந்தால்தான் எங்களுக்குப் பெருமை! எனக்கு அந்தப் பெருமையை வழங்கிய முதல்வர்களான உங்கள் எல்லோருக்கும் முதலில் என்னுடைய நன்றி! உங்களின் Success தான், நான் முதல்வனின் Success! உங்கள் முதலமைச்சரின் Success!

2021இல் ஆட்சி பொறுப்பேற்கும்போது, “ஒரு பெரிய லெகசியோடு தொடர்ச்சியாக வருகிறோம், அடுத்த பத்தாண்டுகளுக்கு தமிழ்நாட்டின் வளர்ச்சியை நோக்கிய ரோடுமேப் இதுதான்... இதற்காக நம்முடைய மாணவர்களை, இளைஞர்களை, பெண்களை, திறன்மிக்கவர்களாக, அறிவில் சிறந்தவர்களாக, உலகை வெல்லக்கூடிய திறமைப் பெற்றவர்களாக வளர்த்தெடுக்க வேண்டும் என்று உள்ளுக்குள் உறுதி எடுத்துக்கொண்டேன்!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.7.2025) சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற “நான் முதல்வன்” மூன்றாண்டு வெற்றி விழா நிகழ்ச்சியில், “வெற்றி நிச்சயம்” திட்டத்தினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், துணை மேயர் மு.மகேஷ்குமார், சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், உயர்கல்வித் துறை செயலாளர் முனைவர் பொ. சங்கர், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் கிராந்தி குமார் பாடி இந்திய தொழில் கூட்டமைப்பின் தமிழ்நாடு யூனிட் தலைவர் உன்னி கிருஷ்ணன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அந்த உறுதியோடு உழைத்த காரணத்தால்தான், இன்றைக்கு வரலாறு காணாத வளர்ச்சியை தமிழ்நாடு அடைந்திருக்கிறது! அதற்கு ஒரு உதாரணத்தை சொல்ல வேண்டும் என்றால், இந்தியாவிலேயே அதிகபட்சமாக 9.69 விழுக்காடு வளர்ச்சி விகிதத்தில் நம்பர் ஒன் மாநிலமாக தமிழ்நாடு தான் இன்றைக்கு இருக்கிறது! இந்த வளர்ச்சியை அடுத்த கட்டத்திற்குக் கொண்டுசெல்வதற்கு நீங்களும் தயாராகிவிட்டீர்கள்! நானும் தயாராகிவிட்டேன்!


தொடர்ச்சி 4ஆம் பக்கம்